# கலாதீபம்

කලාදීබම්

KALADEEPAM

ஸ்தாபிதம் 2020 | 01.05.2024 | தீபம் 23


# சாதிப்பதற்கு வயது தடை கிடையாது முயற்சியே சாதிப்பதற்கான அடிப்படை

## தமிழ்நாடு தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்தின் கல்வியியல் துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் கு.சின்னப்பன் கலாசாலையில் உரை

**வறுமையின் பிடியிலிருந்து கல்வியில் உயர்ந்து மூன்று முனைவர் பட்டங்களைப் பெற்ற தன்னுடைய வாழ்க்கை வரலாற்றை சபையோருக்கு எடுத்துரைத்தார்.**

புரட்சி எண்ணங்கள் புறப்பட்டபோது மாஜினுக்கு வயது 10, சரித்திரத்திற்கே இரத்ததானம் செய்தபோது பகவத்சிங்கிற்கு வயது 20, தன் பாட்டுத்திறத்தாலே தமிழகத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியபோது பட்டுகோட்டைக்கு வயது 28, மகா கவிதைகள் புறப்பட்டபோது பைரனுக்கு வயது 33, சிலுவையில் அறையப்பட்டு யேசு மரித்தபோது வயது 33, தன் பாட்டுத்திறத்தாலே இந்த வையகத்தை தான் பாலித்திட வேண்டும் எனச் சொன்ன பாரதி அமரத்துவம் அடைந்தபோது வயது 38. இங்கே நாம் ஒன்றைத் தெரிந்து கொள்கிறோம் சாதிப்பதற்கு வயது ஒரு தடையில்லை.

வெல்வதற்கு தேசம் இல்லையே என திகைத்து நின்றபோது மகா அலெஸ்சாண்டருக்கு வயது 32. அப்படிப்பட்ட மகா அலெஸ்சாண்டர் ஒரு செய்தியை உலகத்திற்கு சொன்னார். இந்த உலகத்திற்கு நான் வருவதற்கு என் பெற்றோர்கள் காரணமானார்கள், ஆனால் இந்த உலகத்தில் நான் ஒரு சிறப்பான வாழ்கை வாழ்வதற்கு என் ஆசிரியர் அரிஸ்ரோட்டில்தான் காரணம். ஒரு தேசத்தையே கட்டியாண்ட அலெஸ்சாண்டர் கூட ஒப்புக் கொள்கிறார் என்னை உருவாக்கியவர், என்னைச் செதுக்கியவர், என்னை வடிவமைத்தவர் இன்றைக்கு இந்த இடத்தில் நான் சிறப்பாக நிற்பதற்கும், இயங்குவதற்கும் காரணமானவர் என் ஆசிரியர் அரிஸ்ரோட்டில்தான்.

➡ தொடர்ச்சி 05ம் பக்கம்






**01.04.2024 — 30.04.2024 காலப்பகுதிக்கான நிகழ்வுகளின் தொகுப்பு**

## கலாதீபக் குழுமம்

**காப்பாளர்**
திரு சந்திரமௌலீசன் லலீசன்
அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

**பிரதம ஆசிரியர்**
செல்வி தர்ஷினி முத்துராஜா
விரிவுரையாளர், காப்பாளர் ஊடகமன்றம்

**வள ஆலோசனை**
திரு கணபதிப்பிள்ளை செந்தில்குமரன்
பிரதி அதிபர்

திரு தங்கராஜா கோபாலகிருஷ்ணன்
பிரதி அதிபர்

திருமதி சத்தியா ரஞ்சித்
உபஅதிபர்

**வளவார்கள்**
செல்வி மாலதி பத்மநாதன்
விரிவுரையாளர்

திரு வேலும்மயிலும் நந்தகுமார்
விரிவுரையாளர்

செல்வி சுஜீவா அருள்லிங்கம்
விரிவுரையாளர்

திரு இ.செந்தூர்ச்செல்வன்
ஆசிரிய மாணவன் விஞ்ஞானநெறி (2023/2024)

செல்வி தி.பெலினி
ஆசிரிய மாணவி விஞ்ஞானநெறி (2023/2024)

**பட ஒருங்கிணைப்பு**

செல்வநாயகம் கஜந்தன்
தொழில்நுட்ப உதவியாளர்

திரு மு.கஜேந்திரன்
ஆசிரியமாணவன் விஞ்ஞானநெறி (2023/2024)

கலாதீபத்தில் வெளிவரும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையவராவார். ஆக்கங்களில் வெளியிடப்படும் கருத்துக்கள் கலாசாலையின் கருத்துக்களாக கொள்ளப்படமாட்டா.

**வெளியீடு**

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
இருபாலை கோண்டாவில் வீதி,
இருபாலை.
தொலைபேசி: 0212230323

**மின்னஞ்சல் முகவரி**
kaladeepam.ktc@gmail.com


கலாசாலையின் இந்துமன்ற ஏற்பாட்டில் குரோதி புது வருட பிறப்பை ஒட்டி 14.04.2024 காலை 10 மணிக்கு கலாசாலை யோகாம்பிகா சமேத யோகலிங்கேஸ்வரர் ஆலயத்தில் விசேட வழிபாடு இடம் பெற்றது.







# கலாதீபம்

KALADEEPAM

கலாதீபம் – மின்சஞ்சிகை – கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஊடகக் கழக வெளியீடு

කලා දීපම , e - සඟරාව, කෝප්පායි ගුරු විද්‍යාලයීය මාධ්‍ය සංගමයේ ප්‍රකාශනයක්.

The Kaladeepam - e magazine - published by media club of Kopay Teachers' College


## நமது நோக்கு

ஒவ்வொரு ஆண்டும் ஓர் பெயருடன் உதயமாகின்றது. சிங்கள தமிழ் புது வருட பிறப்பு நம் நாட்டில் பெரும்பான்மை பௌத்த இந்து சமய மக்களிடையே புரிந்துணர்வையும், நல்லெண்ண த்தையும் கட்டியெழுப்பும் ஓர் பண்டிகையாக இருந்த போதிலும் யதார்த்த வாழ்வியல் முற்றிலும் வேறுபட்டதாகவே அமைந்து விடுகின்றது.

சாதாரண மனித வாழ்வியல் துன்ப, துயரங்கள், பொருளாதார அசமநிலை, வாழ்வியல் முரண்நிலைகளுக்கூடாக பயணிக்கும் போது புத்துணர்வு குறைந்து மன அழுத்தங்கள் அதிகமாகி சோர்வு தோன்றுகின்றது. சோர்வை நீக்கி புத்துணர்வை ஊட்டும் செயற்பாடாகவே புது வருடப்பிறப்பு அமைகின்றது.

பண்டைய தமிழர் வாழ்வியல் அறிவியலை அடிப்படையாகக் கொண்டது. அறிவியலை தனித்து நுகராது பயன்தரும் வடிவமாக ஆன்மீக நெறியுடன் இணைந்து விளங்கியமை மிகப்பெரும் நுட்பம் அன்றி வேறில்லை.

ஒவ்வொரு ஆண்டும் வருடம் பிறக்கின்றது கொண்டாட்டங்களை கட்டுகின்றன. மனித மனங்களில் நிரந்தரமற்ற மகிழ்ச்சி; உலா வருகின்றது. எனினும் வாழ்வியலில் அன்பும், அறமும் அருகி வருகின்றன எனலாம.; பிறர; துன்பம் கண்டு நம் மனம் கலங்குவதில்லை. அடுத்தவரை அன்பு பாராட்ட முடியாது மனங்கள் சுயநலத்தால் கட்டுண்டு காணப்படுகின்றது.

சாதி, மதம், பேசும் மொழி என்பவற்றால் பிளவுற்றிருக்கும் சமூகம் ஒன்றில் வருடப்பிறப்பு போன்ற பண்டிகைகள் எவ்வித மாற்றங்களையும் ஏற்படுத்தாது கடந்து சென்று விடுகின்றது. தொடர்ந்தும் மறை சிந்தனைகளுக்கு இடமளித்து வாழ்ந்தால் வாழ்வு சிறக்க வாய்ப்பில்லை. எனவே பண்டிகைகளை வெறும் சம்பிரதாயங்களுக்காக கொண்டாடாது சமூக விழிப்புணர;வுக்கும் விழுமிய சிந்தனைகளை வளர;ப்பதற்காக கொண்டாடுவோம்.

**வெள்ளத்தனைய மலர் நீட்டம் - மாந்தர் தம் உள்ளத்தனைய உயர்வு** என்பது வள்ளுவம்.

உள்ளம் உயர்த்தப்பட்டால் உயர்வு உண்டாகும், உள்ளம் உயர்வது எவ்வாறு? விழுமியப்பண்புகளை அகம் கொண்டு வாழ்க்கையை உயர;த்துவதால் உள்ளம் உயரும்.பூகோள வெப்பமுறுதல், காலநிலை மாற்றம், வரட்சி இன்னோரன்ன சவால்களை மனித நடவடிக்கைகளால் எதிர;கொள்ள வேண்டி உள்ளது. சடங்கு, சம்பிரதாயம் என்பதற்கு அப்பால் உயர்ந்த உள்ளம் கொண்ட மானுட விழுமியங்களை பேண புது வருடம் பிறந்திருக்கின்றது.

## கலாசாலையின் உடற்கல்வி விரிவுரையாளர் கனகசபை யதுகுலசிங் அவர்களின் மறைவுக்கு அஞ்சலி



நல்லூர் கொழும்புத்துறை பலாலி கோப்பாய் ஆகிய ஆசிரியர் கலாசாலைகளில் உடற்கல்வி விரிவுரையாளராக இருந்த கனகசபை யதுகுலசிங் (யது சேர்) (வயது 91) அவர்கள் 30.04.2024 அன்று காலமாகிவிட்டார் என்பதை துயரத்துடன் அறிந்துகொண்டோம். இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோதராகிய இவர் கலாசாலையில் விரிவுரையாளராக செயல்பட்ட காலத்தில் கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்பவற்றை தாரக மந்திரமாகக் கொண்டிருந்தார்

1981 ஆம் ஆண்டு தொடக்கம் 1994 ஆம் ஆண்டு ஓய்வு பெறும் வரை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் சேவை புரிந்தார்.

கலாசாலையில் விரிவுரையாளராக இருந்த அமரர் யதுகுலசிங் அவர்கள் ஆற்றிய சேவைகளை தலை சாய்த்து நினைவு கூர்வதுடன் அன்னாரின் ஆன்மா கலாசாலையில் கோயில் கொண்டருளும் யோகலிங்கேஸ்வரர் திருத்தாளில் அமைதி கொள்ள பிரார்த்திக்கிறோம்

## கலாசாலைகளுக்கான முதலாம் தவணை கற்றல் செயற்பாடுகளுக்கான விடுமுறை

இலங்கையிலுள்ள ஆசிரியர் கலாசாலைகளுக்கு ஏப்ரல் 4ஆம் திகதி முதல் முதலாவது தவணைக்குரிய விடுமுறை காலமாகும். இவ்விடுமுறை கல்விசார் உத்தியோகத்தர்களுக்கே உரித்துடையது.

இவ் விடுமுறைக் காலத்தில் இஸ்லாமிய ஆசிரிய மாணவர்கள் தமது ஈகைத் திருநாளையும், இந்து , பௌத்த ஆசிரிய மாணவர்கள் குரோதிப் புத்தாண்டையும் கொண்டாடினாரகள். மீண்டும் கலாசாலையின் கற்றல் நடவடிக்கைளள் 23.04.2024 ஆரம்பமாகியது.

## 2022/2023 ஆம் அணி ஆசிரிய மாணவர்களுக்கான கற்பித்தல் பயிற்சி

எமது கலாசாலையின் இரண்டாம் அணி (2022/2023) ஆசிரிய மாணவர்களுக்கான கற்பித்தல் பயிற்சி தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் 25.03.2024 தொடக்கம் 04.04.2024 நடைபெற்றது. எமது இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்கள் மிக விருப்போடும் அர்ப்பணிப்போடும் இக் கற்பித்தல் பயிற்சியில் ஈடுபட்டமை சிறப்புக்குரியது ஆகும்.இவர்களின் கற்பித்தல் பயிற்சி சிறப்பாக அமைந்திருப்பதை பல விரிவுரையாளர்களும் குறிப்பிட்டிருந்தனர். எமது கலாசாலையில் இருந்து உற்பத்தியாக்கப்படும் விழுதுகள் இந்த மாணவ சமூகத்திற்கு மிகவும் பயனுறுதி வாய்ந்தவை என்பதை நாங்கள் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

## News in Brief - Month of April

**04.04.2024**

**Teachers College Academic Activities Vacation**

The academic activities vacation for teachers' college started from 04.04.2024. - 23.04.2024 for re - academic activities.

**04.04.2024**

Teaching Practicum for the second year (2022/2023 batch) of Teacher Trainees was held from 25.03.2024 to 04.04.2024.

**14.04.2024**

Tamil New Year special pooja was held at Yogalingeswarar temple by Hindu Union.

**22.04.2024**

A guest speech was held at Kopay Teachers' College at Rathiluxmi Hall on 22.04.2024 Monday at 9,00 a.m

The event was headed by college Principal Mr S, Laleeson The event moderated by Mr K.Senthilkumaran Deputy Principal.

The Guest speaker was Prof. Dr. Ku. Chinnappan. Head, Department of Education & Management Thanjavur Tamil University, Tamil Nadu. He spoke on the topic of contemporary Trends in Teacher Education.

The Introductory speech was delivered by Mr S.Sharveswara Lecturer, University of Jaffna.

Though 22.04.2024 was a holiday for the academic activities of the college, more than eighty people from the college community and education well-wishers participated in this event.

## My Gift

**An Iron Lady of my life,**
**An angel of my life,**
**Who gave me this birth**
**Is my mother she is everything for me.**

**A kind-hearted, dumping lots of**
**sorrow in her mind.**
**But never neglected her duties.**
**She is the best gift**
**I ever had from God.**

**She carried me in her womb,**
**Made me by giving her blood. That's how**
**I was born.**
**Being beside with me**
**In all my difficulties.**

**She made me like this today.**
**Indebted for what she**
**has done to me.**
**She is the first best teacher**
**I ever had in my life.**

**She is the one who showed me everything.**
**She is the one who gave me everything.**
**She is the one who brought me here.**
**She is Shandran Sivapakkiyam.**
**She fed me milk, love, confidence and so on.**

**Due to my life style, I am not with her.**
**I feel sorry for not being with her.**
**If I have the grace of God,**
**I will be with her again**
**Waiting for the Grace Waiting for**
**the Grace.**



**Mrs Kavusiya Thinesh**
**English Course Teacher Trainee**
**2023/2024**

# பேராசிரியர் கு சின்னப்பன் அவர்கள் ஆசிரியர் கலாசாலையில்

முதலாம் பக்கத் தொடர்ச்சி

தமிழ்நாடு தஞ்சாவூர் தமிழ் பல்கலைக் கழகத்தின் கல்வியியல்துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் கு. சின்னப்பன் ஆசிரியர் கல்வியின் சமகால செல்நெறி என்ற பொருளில் 22/4/2024 காலை 9 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் அதிதி உரை ஆற்றினார். அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வினை பிரதிஅதிபர் க. செந்தில் குமரன் நெறிப்படுத்தினார்.

நிகழ்வில் அறிமுக உரையை யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்வியியல்துறை விரிவுரையாளர் இரத்தினசிங்கம் சர்வேஸ்வரா நிகழ்த்தினார். கலாசாலையின் பிரதி அதிபர் தங்கராசா கோபாலகிருஷ்ணன் நன்றி உரை வழங்கினார் அதிதி உரையாற்றிய பேராசிரியர் முனைவர் கு சின்னப்பன் ஆசிரியர் தொழிலில் சிறப்பு ஆசிரியர்களுக்கு தமிழகத்தில் இருக்கக்கூடிய உயர் கல்வி வாய்ப்புகள் குறிப்பாக முனைவர் பட்டம் பெறுவதற்கான வழிமுறைகள் மற்றும் இலங்கையில் இருந்தவாறு தமிழகத்தின் பல்கலைக்கழகங்களில் இணையவழியில் கற்றுச்சான்றிதழ் பெறுவோரின் பட்டத்திற்கான செல்லுபடித்தன்மை பற்றிய தெளிவுபடுத்தல்களை வழங்கினார்.

இவர் தமிழ் இலக்கியம், கல்வியியல், வெகுசன ஊடகத்துறை என்பவற்றில் தனித்தனியே முனைவர் பட்டங்களை பெற்றார் என்பதுடன் இந்தியாவில் வாழும் முனைவர்களுள் மூன்று முனைவர் பட்டம் பெற்ற இருவருள் இவரும் ஒருவராவார் என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த 20.04.2024 மற்றும் 21.04.2024 இரு தினங்கள் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற கல்வியியல் ஆய்வு மாநாட்டின் ஆதார சுருதி உரை (Keynote Address) ஆற்றுவதற்காக வருகை தந்திருந்த பேராசிரியர் முனைவர் கு.சின்னப்பன் பல்கலைக்கழக சமூக உறவின் வெளிப்பாடாக கலாசாலையில் இந்த உரையை ஆற்றினார்.பேராசிரியருடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களான கலாநிதி வை.விஜய பாஸ்கரன், இ.சர்வேஸ்வரா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

**22.04.2024** கலாசாலை கல்விசார் நடவடிக்கை களுக்காக விடுமுறை நாளாக இருந்தபோதிலும் கலாசாலை சமூகத்தினரும் கல்வி ஆர்வலர்களும் என எண்பதிற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.











# கலாசாலை கட்டட திருத்தவேலைகள்

## GIMP Project (General Education Modernization (GIM) Project)

கலாசாலையில் GIMP Project (General Education Modernization (GIM) Project இல் 2.1 மில்லியன் பெறுமதியான கலாசாலையின் கட்டடத் திருத்த வேலைகள் நடைபெறுகின்றன.

கல்வி அமைச்சர் டாக்ரர் சுசில் பிறேமஜெயந்த, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆசிரியர் கல்வி ஆணையாளர் டாக்டர் கே.எ.டி புண்ணிய தாஸ, மற்றும் திருமதி பீ.ஜீ.ஜ களனி ஹேமாலி, ஆசிரியர் கல்விப் பணிப்பாளர், திருமதி டபிள்யூ.ஜீ.எஸ்.பி.எம் ஸ்ரீமா தசநாயக்க, ஆகியோரின் பரிந்துரையின் அடிப்படையில் கலாசாலையில் திருத்த வேலைகள் இடம்பெறுகின்றன.

யாழ்ப்பாணம் கொய்யாத்தோட்டத்தைச் சேர்ந்த லிங்கம் கட்டட ஒப்பந்தகாரர்கள் வேலையை முன்னெடுத்து வருகின்றனர்.

இதன்கீழ் நூலகம், வகுப்பறைகள், அதிபர் விடுதி என்பவற்றில் கூரைத்திருத்தம், தரை புனரமைத்தல், மின்சார இணைப்பு மறுசீரமைத்தல் தீந்தை பூசுதல் (Painting), முதலிய வேலைகள் இடம்பெறுகின்றன.

இவ்வேலைகள் கடந்த 27.03.2024 அன்று வடக்கு மாகாண பாடசாலை வேலைகள் பணிப்பாளர் எந்திரி அபிராமி வித்தியாபரன் அவர்கள் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.












# ஈதுல் பித்ர் (நோன்பு பெருநாள்)



சாஜகான் பாத்திமா நுஸ்லா
முதலாம் வருட ஆசிரிய மாணவி
விசேடகலவி பாடநெறி
2023/2024

உலக முஸ்லிம்களால் இரண்டு பெருநாட்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன. அவை **ஈதுல் பித்ர்** எனப்படும் ஈகைத்திருநாள் அல்லது நோன்புப் பெருநாள் அடுத்து ஈதுல் அழ்ஹா எனப்படும் தியாகத் திருநாள் அல்லது ஹஜ்ஜுப் பெருநாள் என்பனவாகும். மனிதனின் மன மகிழ்வுக்கு பெருநாள் துணை நிற்கின்றது. அந்த வகையில் இஸ்லாம் நோன்பு , ஹஜ் என்ற இரு வணக்கங்களின் அடிப்படையில் பெருநாட்களை அமைத்து தந்துள்ளது.

இஸ்லாமிய மாதங்கள் 12 காணப்படுகின்றன அதில் ஒன்பதாவது மாதம் ரம்லான் மாதமாகும். 11 மாதங்கள் உலக வாழ்வுக்காக மனிதர்கள் தம் தொழில் தனது குடும்பம் , தனது வாழ்க்கை என ஓடிக்கொண்டிருக்கும் போது, இந்த ரமலான் மாதம் முழுவதும் நோன்பு நோற்கப்பட்டு வணக்க வழி-பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் மனித உள்ளங்களில் இறையச்சம் அதிகரிக்க வாய்ப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன. இறையச்சத்தை மேலோங்கச் செய்வதே நோன்பின் பிரதான நோக்கமாகும். இந்த ரமலான் மாதம் முழுவதும் இறைவன் கட்டளைக்கு அடிபணிந்து பசித்திருந்தும் , தாகித்திருந்தும் , தமது புலன்களைக் கட்டுப்படுத்தியும் , நன்மையான காரியங்களில் ஈடுபட்டும் முஸ்லிம்கள் நோன்பினை நோற்கின்றனர்.

இதனையே நபி **ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்** அவர்கள் **“பாவமான பேச்சுக்கள் செயற்பாடுகள் என்பவற்றிலிருந்து ஒரு நோன்பாளி விடுபடவில்லை என்றால் அவர் தனது உண்ணல் , குடித்தல் என்பவற்றை விட்டும் தவிர்ந்து கொள்வதில் அல்லாஹ்வுக்கு எந்த தேவையும் கிடையாது”** எனக் கூறுகின்றார் இந்த நபி மொழியின் மூலம் பாவக்கறையிலிருந்து ஒருவர் விடுபடுவதே நோன்பின் பிரதான நோக்கம் என்பது புலனாகின்றது.

இவ்வாறு ரம்ழான் மாதம் முழுவதும் நோன்பினை நோற்ற முஸ்லிம்கள் அதனைத் தொடர்ந்து வரும் ஷவ்வால் மாத தலைப்பிறை தென்பட்டவுடனேயே நோன்புப் பெருநாளை மிகவும் மகிழ்ச்சியாக கொண்டாடுகின்றனர். இந்த ஈதுல் பித்ர் தினத்திலே முக்கியமான ஒரு கடமையாக ஸ காத்துல் பித்ரா காணப்படுகின்றது. இது நோன்பு நோற்றவர்கள் அவர்களின் நோன்பை பூரணப்படுத்தும் வகையில் ஸகாத்துல் பித்ரினை நிறைவேற்ற வேண்டும். நோன்பு நோற்ற அனைவரும் தனது பொறுப்பிலும், பராமரிப்பிலும் உள்ள பெற்றோர், குழந்தைகள் அனைவர் மீதும் ஸகாதுல் பித்ர் பெற்றுக் கொடுப்பது கடமை ஆகும். குறைந்தது நாம் உணவாகக் கொள்கின்ற அரிசியை வறியவர்களுக்கு தர்மம் செய்தாவது அக்கடமையை நிறைவேற்ற வேண்டும். இக்கடமையை பெருநாள் தொழுகைக்கு செல்லுமுன்னர் நிறைவேற்ற வேண்டும்.

ஈதுல் பித்ர் தினத்தில் எந்த ஒரு முஸ்லிமும் பசிதீர்த்து மகிழ்ந்திருக்க வேண்டும் என்பதே ஈகையின் தனித்துவமாக உள்ளது. இத்தினத்திலே பெருநாள் தொழுகையை நிறைவேற்றுவது, தொழுகை நடைபெறும் வரை தக்பீர் முழங்குவது, தொழுகைக்கு செல்லுமுன் எதையாவது உண்ணுவது, புத்தாடை அணிவது, ஆண்கள் மணம் பூசிக்கொள்வது, சந்திப்பவர்களுக்கு ஸலாம் கூறி கைலாக செய்வது ,உறவினரை சந்திப்பது, ஏழைகளுக்கு தர்மம் செய்வது, இத்தொழுகையை மைதானங்களில் நிறைவேற்றுவது என்பன இஸ்லாம் எம்மிடம் எதிர்பார்க்கின்ற நல்ல அம்சங்கள் ஆகும்.

# உலகை அச்சுறுத்தும் இலத்திரனியல் கழிவுகள்



மு. கஜேந்திரன்
1ஆம் வருட
ஆசிரிய மாணவன்
விஞ்ஞானப் பாடநெறி
2023/2024

இலத்திரனியல் சாதனங்கள் இன்று உலகில் அதிவிரைவான தயாரிப்புக்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. தகவல் தொழில் நுட்ப சாதனங்களின் வளர்ச்சி, துரித பொருளாதார அபிவிருத்தி, நகரமயமாக்கம், நுகர் பொருள் கொள்வனவு, தொழல்நுட்ப வளர்ச்சி முதலியன இலத்திரனியல் உற்பத்திகளின் தேவையை அதிகரித்துள்ளன. இதனால் இலத்திரனியல் சாதனங்கள் எமது நாளாந்த வாழ்க்கையில் தவிர்க்க முடியாத அத்தியவசியமான தேவையாக மாறியுள்ளன. இலத்திரனியல் கழிவு என்பது மீள் சுழற்ச்சிக்கு உட்படுத்த முடியாதவை என்பதனால் இவை சூழலுடன் சேர்வதனால் பெறுமளவு பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. இவற்றில் இருந்து வெளியாகும் ஆசனிக், கட்மியம், குரோமியம், இரசம், ஈயம், நாகம், பேரியம், செம்பு, புரோமின் என்பன மண் வளம், நீர் வளம், காற்று வளம் என்பவற்றை பெருமளவு பாதிக்கின்றது.

உலகலாவிய ரீதியில் வருடாந்தம் 13 கோடி கணினிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மில்லியன் கணக்கான கணினிகள் விற்கப்படுகின்றன. இதனால் வருடந்தோரும் 2050 மெற்றிக்தொன் இலத்திரனியல் கழிவுகள் சூழலுக்கு விடுவிக்கப்படுகின்றன. அத்துடன் தினமும் 45 மெற்றிக்தொன் இலத்தினியல் கழிவுகள் சூழலில் குவிகின்றன. இவற்றில் அதிகளவு கழிவுகளை ஐரோப்பா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா நாடுகள் விடுவிக்கின்றன. நைஜீரியா நாட்டுக்கு இலட்சக்கணக்கான பாவிக்காத கையடக்கத் தொலைபேசிகளும் கணினிகளும் உலோகங்களை வேறாக்கி பெறுவதற்காக அபிவிருத்தியடைந்த நாடுகளில் இருந்து நாளாந்தம் அனுப்பப்படுகிறது.

பாதிப்புக்கு உள்ளாகின்றன. இதனால் இத்திரனியல் கழிவுகள் சூழலின் உயிர்ப் பல்வகைமையிலும் இயற்கையின் சமநிலைத் தன்மையிலும் மனிதனின் ஆரோக்கியத்திலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இலத்திரனியல் கழிவுகள் மண்ணில் புதையும் போது அவை உக்குவதில்லை. நீண்ட காலம் மண்ணில் புதையுண்டு இருந்து மண்ணின் வளத்தையும் தரத்தையும் குறைக்கின்றது. அத்துடன் நச்சுத்தன்மை அடைகின்றது. இதனால் மண் வாழ் அங்கிகள், தாவரங்கள் என்பன அழிவடைகின்றன.

உதாரணமாக கையடக்கத் தொலை பேசியின் மின்கலத்தில் அடங்கியுள்ள இரசாயனப் பதார்த்தம் 550-600 கன அடி வரையிலான மண்வளத்தின் இயற்கைத் தன்மையை மாற்றக்கூடியது.

இலத்திரனியல் கழிவுகளை எரிப்பதனால் உண்டாகும் நச்சு வாயுகள் (கந்தகவீரொட்சைட்டு, நைதரசனீரொட்சைட், டையொக்சின் வாயு) வளிமண்டலத்துடன் கலந்து வளிமண்டலத்தில் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. கணினியை தீயிட்டு எரிப்பதனால் அதிலுள்ள ஆசனிக்கு, ஈயம், பெர்லியம், கோபோல்ட், இரசம் போன்ற இரசாயன மூலக்கூறுகள் புகையாக வெளியேறி வளிமண்டலத்துடன் கலக்கின்றன. இதனால் பாரிய அழிவுகள் ஏற்படுகின்றன. அமில மழை பொழிதல், ஓசோன் படை துவாரம், கழியூதாக்கதிர்களின் தாக்கம் முதலியவற்றைக் கூறலாம்.

மேலும் முறையான மீள் சுழற்சியும், அழித்தொழிப்பும் இல்லாமையால் இலத்திரனியல் கழிவுகள் உடலியல் சார் பிரச்சினைகளையும் ஏற்படுத்துகின்றன. ஒரு கணினியின் உற்பத்திக்கு 22 கிலோ கிராம் இரசாயனக் கலவை பயன்படுத்தப்படுகின்றது. அத்துடன் அக் கணினியை இயக்க பாரியளவிலான சக்தியும் செலவாகின்றது. இத்தகைய சக்தி அனைத்தும் முழுமையாக பயன்படுத்தப்படுவதில்லை. மாறாக 20 வீதம் தொடக்கம் 40 வீதம் வரையான சக்தி

சூழலுக்கு வீண்விரயமாக இழக்கப்படுகின்றது. இவை தீவிர நச்சுத்தன்மை உடையதாக விளங்குகின்றது. அத்துடன் கணினி ஒன்றின் உற்பத்திக்கு 7 கிலோ கிராம் பிளாஸ்திக்கு பயன்படுகின்றது. அன்றாடம் இப் பொருட்களை பயன்படுத்துவதால் புற்றுநோய், சிறுநீரகபாதிப்பு, சுவாசப் பிரச்சினை, ஆண்மைக் குறைபாடு, தைரொக்சைட், கருவின் வளர்ச்சி வீதம் குறைவு, வயதுக்கு முன் பூப்படைதல் என்பன ஏற்படுகின்றன.

மேலும் இலத்திரனியல் கழிவுகளின் முறையற்ற அழித்தொழிப்பு இல்லாமையால் நீர் வளம் பாதிப்புக்குள்ளாகின்றது. பழுதடைந்து வீசப்படும் கையடக்கத் தொலைபேசி ஒன்றின் மின் கலம் 30000 லீற்றர் நீரை மாசடையச் செய்கின்றது.

இலங்கயைப் பொருத்தவரையில் வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு அனுப்பப்படும் இலத்திரனியல் கழிவுகளைக் குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. அத்துடன் கணினி, கையடக்கத் தொலைபேசி முதல-ியுவற்றுக்கான விலைகள் அதிகரிப்பற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளது.

இலங்கையில் இலத்திரனியல் கழிவுகளினால் ஏற்படும் சூழலியல் அபாயத்தைக் குறைக்கும் நோக்கில் பழைய கையடக்கத் தொலைபேசிகளை சேகரிக்கும் திட்டம் சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கததக்க வளங்கள் அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் இலத்திரனியல் கழிவுகளை அழிப்பதனால் ஏற்படும் பாதிப்புக்களைத் தவிர்ப்பதற்கு மத்திய சுற்றாடல் அபிவிருத்தி அதிகார சபை இத்திரனியல் கழிவுகளை பொறுப் பேற்பதற்கான சில நிறுவங்களை பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனவே மனிதனது அத்தியவசியமான தேவைகளிளும் ஆடம்பரமான தேவைகளிலும் இலத்திரனியல் சாதனங்களின் பாவனை தவிர்க்க முடியாததாகி உள்ளது. இந்த சாதனங்களின் உற்பத்தி மற்றும் பயன்பாட்டின் மூலம் வெளியிடப்படும் கழிவுகளானது சூழலின் ஒட்டு மொத்தமான உயிரியல் கோலத்திற்கு பாதிப்புகளை ஏற்படுத்துகின்றது. எனவே இலத்திரனியல் சாதனங்களின் பாவனைகளைக் குறைத்து கூடுமானவரை மீள்சுழற்சிக்கு உற்படுத்தி மீணடும் பயன் படுத்துவதன் ஊடாக இதன் தாக்கத்தை பகுதியளவேனும் குறைத்து இந்தப் பூமியில் அனைத்து வளங்களையும் எதிர்கால சந்ததியிருக்கு கொடுக்கலாம் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.



# பிள்ளைமையக் கல்வியில் ஆரம்பக்கல்வி ஆசிரியரின் வகிபாகம்



திருமதி மைதிலி கோகுலகண்ணன்
2ஆம் வருட ஆசிரிய மாணவி
ஆரம்பக்கல்வி பாடநெறி
2022/2023

பிள்ளைப் பருவம் ஒரு உணர்திறனுள்ள பருவமாகும். இந்தக் கட்டத்தில் ஒரு பிள்ளை உடல், உள, ஒழுக்க ரீதியாக விருத்தியடைகிறது. மொழியும் ஆக்கத்திறனும் கூட இந்தக் காலகட்டத்தில் விருத்தியடைகின்றது. ஆனால் அங்கே பிள்ளைகளுக்கிடையிலான வேறுபாடுகள் உள்ளன. ஆகையினால் ஆசிரியர் இந்த வேறுபாடுகளைப் புரிந்து கொள்ள வேண்டியதுடன் நவீன விஞ்ஞான பூர்வ அறிவையும் பெற்றிருக்க வேண்டும். ஆசிரியர் ஒரு அன்பான உற்சாகமான நபராக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு பிள்ளையும் சில செயல் வல்லமைகளுடன் பிறந்திருப்பதையும் வீட்டில் பிறப்பு தொடக்கம் மூன்று அல்லது நான்கு வயது வரை பெற்றிருக்கும் அனுபவங்களுடன் பாடசாலைகளுக்கு வருவதையும் ஆசிரியர் மறக்கக் கூடாது. ஒவ்வொரு பிள்ளையும் பெறுமதியான சொத்தென்றும் பிள்ளை கற்றல் அனுபவங்களைப் பெறத் தேவையான சூழலை பிள்ளைமையக் கல்வியூடாக வழங்க முடியும் என்றும் நம்ப வேண்டும். பெற்றோரின் கைகளிலிருந்து நேரடியாக ஆசிரியரின் கைகளுக்கு வரும் பிள்ளைக்கு இடம்சார் பெற்றோர் ஆசிரியர் ஆவார். எனப் புரிந்து கொள்ள வேண்டும. ஆகையினால் பிள்ளையையை ஆச்சரியமானதும் மகிழ்ச்சியான அனுபவங்களைக் கொண்ட அற்புதமான ஒரு உலகுக்கு எடுத்துச்செல்ல வேண்டும்.

அவர்கள் மகழ்ச்சியாகவும், ஆரோக்கியமாகவும் கவர்ச்சியாகவும் இருக்க வேண்டும். அவர்களது வகிபாகம் அன்பினாலும் இரக்கத்தினாலும் நிறைந்திருக்க வேண்டும். உணர் திறனுள்ள இரக்கமான ஒரு ஆசிரியர் பிள்ளைகளின் உளதிருப்திக்கு பங்களிப்புச் செய்து அவர்கள் திருப்திகரமான கற்றல் அனுபவங்களைப் பெற அவர்களுக்கு உதவுவார். அவர் உன்னதமான சுயபண்புகளை வெளிக் காட்ட அடிப்படையாகக் கொண்ட கற்றற் சூழலை வழங்க வேண்டும். ஆசிரியர் பிள்ளைக்கு ஒரு நண்பனாக இருக்க வேண்டும். அத்துடன் பரிவானவராகவும் பிள்ளையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு முன்னுரிமை கொடுப்பவராகவும் இருக்க வேண்டும்.

ஆசிரியர்களின் விழுமியங்களும் தத்துவங்களும் பிள்ளைக்குக் கடத்தப்படுவதால் அவர்களது மொழி, சமயம், இனம் நோக்கிய முற்சாய்வைக் கொண்டிராமல் சரியான மனப்பாங்குகளை உடையவர்களாயிருக்க வேண்டும். பிள்ளை வாழ்ந்து கொண்டிருக்கும் உலகத்தைப் பற்றிய விழிப்புணர்விற்கு உதவி செய்யும் ஒரு கற்றற் சூழலை வழங்குவதில் ஆசிரியர் மிகவும் ஆர்வம் மிகுந்தவராக இருக்க வேண்டும். இந்தக் காலப்பகுதியில் சகல சமூகத் தொடர்புகளும் உருவாக்கப்பட்டு கொண்டிருப்பதனால் பிள்ளைக்கு அன்பும், பாசமும் மட்டுமன்றி பயம் அல்லது கோபத்தை விருத்தி செய்வதற்கு இடம் கொடாத சூழலும் தேவைப்படுகின்றது. ஆசிரியர்களுடனும் சகபாடிகளுடனும் மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் காலத்தை கழிக்க உதவிபுரியவும் தொடர்புகளைக் கட்டியெழுப்புவதற்கு பிள்ளைக்கு அவசியமான பின்புலத்தை ஆசிரியர் வழங்கவும் வேண்டும். பிள்ளைகள் இயலாதவர்கள் என்ற எண்ணத்தை ஆசிரியர் கொண்டிருக்கலாகாது. பிள்ளைகள் இயலுமானவர்கள் என நம்புவதால் பிள்ளைகளின் தன்னம்பிக்கையை விருத்தி செய்ய வேண்டும். பிள்ளைகளைப் பாராட்டி ஊக்குவிக்க வேண்டும். இவ்வாறு பிள்ளை மையச் சூழலில் ஆசிரியர் என்பவர் அறிவுறுத்துநர் என்பதை விட ஒரு வசதிப்படுத்துனர் ஆவார். அவர்களது பணி ஒவ்வொரு பிள்ளையின் ஆற்றல்களுக்கும் தேவைகளுக்கும் ஏற்ப ஆக்க பூர்வ கற்றல் சூழலை வழங்குதலுடன் கற்கப் போதுமான வாய்ப்புக்களை வழங்குவதுமாகும்.

# ஆற்றல் மிக்க ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களிடம் காணப்படவேண்டிய நடத்தைசார் மாற்றங்கள்



**திருமதி விஜிதா கமலவண்ணன்**
**2ஆம் வருட ஆசிரிய மாணவி**
**ஆரம்பக்கல்வி பாடநெறி**
**2022/2023**

கல்வியானது மனிதவள மேம்பாட்டிற்கும் மனித வாழ்க்கை முன்னேற்றத்திற்கும் உறுதுணையாக அமைகின்ற ஒன்றாகக் காணப்படுகின்றது. கல்வியில் ஏற்படும் முன்னேற்றமானது ஒரு நாட்டின் அபிவிருத்தியில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

ஒரு நாட்டின் வளமான எதிர்காலம் அந்நாட்டில் அளிக்கப்படும் கல்வியிலேயே தங்கியுள்ளது. எனவே இக்கல்வியை மாணவர்களுக்கு வழங்குகின்ற ஆசிரியர்களுக்கான சில பண்புகளும் காணப்படுகின்றன.

**ஆரம்ப பாடசாலை ஆசிரியருக்கான வகிபாகம்**

**சிறந்த கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை வடிவமைத்து முன்னெடுப்பவராகவும் அதனை முகாமை செய்பவராகவும் இருத்தல்.**

ஆசிரியரானவர் கல்வியின் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை தெளிவாக விளங்கியிருப்பதுடன் கலைத்திட்ட உள்ளடக்கத்தை தீர்மானிக்க பிள்ளையின் ஆர்வம், தேவை, விருப்பம் எவை மற்றும் கற்றல், கற்பித்தலில் தான் கையாள வேண்டிய முறைகள் போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்க கூடியவராக இருத்தல்.

**ஆலோசகராகச் செயற்படல்**

மாணவர்களுக்கு உடல், அறிவு, மனபப்பாங்கு ஒழுக்க ரீதியான திறன்களை வழங்கவும் சமய பண்புகளைப் பின்பற்றச் செய்வதற்கும் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்கள் வழங்கி அவர்களுக்கு உதவுகின்ற ஒரு ஆலோசகராகவும் ஆசிரியர் காணப்பட வேண்டும்.

**குணவியல்புகளை கட்டியெழுப்பக் கூடிய-வராக இருத்தல்.**

ஆசிரியர் சுயஒழுக்கமும் முன்மாதிரியான நடத்தையும் உடையவராக இருப்பதோடு கருணை உள்ளம் கொண்டவராகவும் இனிமயாகப் பேசக்கூடியவராகவும் இருக்க வேண்டும்.

இப்பண்புகளை தானும் பின்பற்றுவதோடு மாணவரையும் பின்பற்றச் செய்கின்ற குணவியல்புகளை கட்டியெழுப்பும் பொறுப்பையும் ஆசிரியர் வகிக்கின்றார்.

**சமூகத்தை கட்டியெழுப்புவதில் பங்களிப்புச் செய்பவராக இருத்தல்**

சமூகத்தின் உயர்வான ஒழுக்க நெறிகள் மற்றும் சமூக அபிவிருத்தி என்பவற்றில் தன்னை ஈடுபடுத்தும் ஒரு சமூக பொறியியலாளர் வகிபாகத்தை வகிக்கக் கூடியவராகவும் ஆசிரியர் இருப்பார்.

**தேசத்தை கட்டியெழுப்புவதில் பங்களிப்புச் செய்பவராக இருத்தல்.**

நாட்டின் வரலாறுகள் தொடர்பான விளக்கத்தை வழங்குகின்ற பொதுநலத்தை தூண்டும் பண்புகள் மற்றும் நாட்டின் வளங்களைப் பாதுகாக்கும் பண்புகளை மாணவர்களிடம் ஏற்படுத்துகின்ற பண்புள்ளம் கொண்ட தேசத்தை கட்டியெழுப்புவதில் ஆற்றல் உள்ளவர்களும் ஆசிரி யராக இருக்க வேண்டும்.

**சூழல் பாதுகாவலராக செயற்படல்**

சூழல் பாதுகாப்பு அயற்சூழலை சுத்தமாக வைத்திருத்தல், சூழல் மாசடைதலை தவிர்த்தல், இயற்கையை நேசித்தல் பாதுகாத்தல் போன்ற பண்புகளை தானும் பின்பற்றி மாணவர்களையும் பின்பற்றச் செய்கின்ற சூழல் பாதுகாவலராகவும் ஓர் ஆசிரியர் இருக்க வேண்டும்.

**உளவியல் அறிவு**

மாணவர்களின் தனியாள் வேறுபாடுகளை பற்றி அறிய மாணவர் உளவியல் பற்றி ஆசிரியர் கற்றறிந்தவராக இருத்தல் வேண்டும்.

**மாணவரின் தனித்தன்மைக்கு மதிப்பளித்தல்**

ஒவ்வொரு மாணவர்களுக்கும் தனித்தன்மையுண்டு எனவே மாணவர்களின் எண்ணங்களுக்கு

## ஆற்றல் மிக்க ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களிடம்………

மதிப்பளிக்க வேண்டும்.

**பாரபட்சமற்ற முறையிலிருத்தல்**

ஒரு ஆசிரியர் ஒரு சில மாணவர்களுக்கு மட்டும் சலுகை அளிப்பவராக இருத்தல் கூடாது எல்லா மாணவர்களையும் ஒரே மாதிரியாகப் பாவித்தல் வேண்டும்.

**பொறுமை**

மாணவர்களை சரியான வழிக்கு கொண்டுவுர சிறிது கால அவகாசமும் பொறுமையும் தேவைப்படுகிறது எனவே ஆசிரியர் பொறுமையுடனிருத்தல் வேண்டும்.

**ஆராய்ச்சி மனப்பான்மை**

தன்னுடைய நேரத்தை புது வகையான கற்பித்தல் முறைகளை ஆராய்ந்து தேர்வு, செய்யக் கூடியவராக ஆசிரியர் இருத்தல் வேண்டும்.

**தினசரி குறிப்புக்களைத் தயார் செய்தல்.**

ஆசிரியர் எவ்வளவு திறமைமிக்கவராக, அனுபவசாலியாக இருப்பினும் கற்பித்தலுக்கு முன் குறிப்புகளைத் தயார் செய்தல் அவசியம்.

**நகைச்சுவையுணர்ச்சி**

ஆசிரியரானவர் இயற்கையாகவே நகைச்சுவையுணர்ச்சியுடனும், நல்ல பண்புகளுடனும் இருப்பது முக்கியம்.

**கேள்வி கேட்கும் திறமை மற்றும் ஆசிரியர் முன்னுதாரணமாய் இருத்தல்**

ஆசிரியர் உத்தரவிடுபவராகவோ வேலை வாங்குபவராகவோ இல்லாமல் உதவி புரி-பவராகவும், வழிகாட்டியாகவும், ஆலாசனை கூறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

**இவ்வாறு** ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள் பின்வரும் முக்கிய பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும்.

# வேகம்



**இ.செந்தூர்செல்வன்**
**1ஆம் வருட ஆசிரிய மாணவன்**
**விஞ்ஞான பாடநெறி**
**2023/2024**

என் பிஞ்சு கைகள் நான் பாவித்த பென்சில்களை தொட எத்தனிக்கின்றன. எனினும் பென்சில்களை தொட முடியவில்லை. நான் ஆசையாக நேசரி போக வாங்கிய புத்தகப்பை கிழிந்து மூலைக்குள் கிடக்கிறது. அப்பா என்னை பார்க்கிறார் இல்லை. அப்பா, அப்பா என்று கூப்பிட்டு அலுத்துவிட்டது. ஏன்? என் படத்தை பார்த்து அழும் அப்பா என்னை பார்க்கிறார் இல்லை.

காலையில் உதித்த சூரியனின் கதிர்கள் நிலமகளை தழுவியவாறு பகல் பொழுது புலந்தது நானும் உங்களை போலவே நேசரிக்குப் போக நல்ல விருப்பம் அதுவும் அப்பாவோடு போறது என்டா நல்ல சந்தோஷம். அப்படித்தான் நானும் அப்பாவும் நேசரிக்கு போகேக்க வேகமாக வந்த டிப்பர் அப்பாவின்ற மோட்டார் சைக்கிளோட மோதி பிறகு என்ன நடந்ததோ தெரியா

நானும் பார்க்கிறன், கூப்பிடுறேன், பாடுறேன், ஆனா யாருமே என்னை கண்டு கொள்ளவில்லை. என்ற போட்டோவை வைத்து சாப்பாடெல்லாம் வைக்கினம் ஆனா என்னை கண்டு கொள்ளவில்லை.

வாழப் பிறந்த உயிர் வாடி நிக்குது யாருல பிழை வேகம் விவேகம் அல்ல டிப்பர் ஓடுற மாமாக்கள் தயவு செஞ்சு மெதுவாக ஓடுங்கோ நாங்களும் உங்கட பிள்ளைகளைப் போல தானே, வாழ வேண்டி வந்து ஆவியா திரியிறம்

போயிற்று வாரன்